தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
முதலாந் தவணைப் பரீட்சை – **2020**
கத்தோலிக்க திருமறை
தரம் - 5

சுட்டெண் :-……..…. நேரம்: 1.00 மணி

I. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. திருவிவிலியத்தில் படைப்புப் பற்றிக் கூறும் நூல் எது?
   A. விடுதலைப்பயணம் B. தொடக்கநூல் C. லேவியர்
2. திறமைகளை வளர்த்தல் பற்றிக் கூறும் நூல் எது?
   A. தாலந்து உவமை
   B. நல்லசமாரியன் உவமை
   C. முத்து உவமை
3. "பூக்களின் கதை" என்னும் சிங்கள மொழிப் பாடலை எழுதியவர் யார்?
   A. அருட்தந்தை மார்சலின் ஜெயக்கொடி
   B. புனித யோசேவாஸ் அடிகளார்
   C. புனித பிரான்சிஸ் அசீசியார்
4. இயேசு கற்பித்த செபம் எது?
   A. விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே
   B. அருள் நிறைந்த மரியே
   C. பரலோக பூலோக மன்னாவே
5. இயேசு திருமுழுக்குப் பெற்றபோது தூயாவி என்ன வடிவில் வந்திறங்கியது?
   A. புறா வடிவில் B. நாக்கு வடிவில் C. நெருப்பு வடிவில்

(10புள்ளி)

II. பின்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

1. இயேசு கற்பித்த செபத்தில் எட்டுப் பண்புகள் உள்ளன. ( )
2. இயேசு பெத்சாய்தா நகரில் இறந்த நபரை உயிர்ப்பித்தார். ( )
3. பாவ அறிக்கை செய்தால் மன்னிப்புப் பெறலாம். ( )
4. உறுதிபூசுதல் பெற திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும். ( )
5. பத்து வயதில் உறுதிப்பூசுதலைப் பெறலாம். ( )

(10புள்ளி)

www.lkedu.lk

III. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(சவால்களை, உறுதிபூசுதலினால், இலாசர், விருப்பத்தை, அறிந்து, விருத்தி)

1. ..... முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகின்றோம்.
2. இறைவனின் ..... அறிந்து செயற்பட வேண்டும்.
3. தூயாவியின் வல்லமையால் ..... வெற்றி கொள்ளலாம்.
4. படைப்புக்களை பாதுகாத்து ..... செய்தல் எமது கடமையாகும்.
5. ..... இறந்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்.

(15புள்ளி)

IV. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது என எழுதுக.

1. ''பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்''
   யாரால் : .....
   யாருக்கு : .....
2. ''சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள்''
   யாரால் : .....
   யாருக்கு : .....
3. ''தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்''
   யாரால் : .....
   யாருக்கு : .....
4. ''ஐயா நீர் கடின உள்ளத்தினர்''
   யாரால் : .....
   யாருக்கு : .....
5. ''இது உங்களுக்காக கையளிக்கப்படும் என் சரீரம்''
   யாரால் : .....
   யாருக்கு : .....

(15புள்ளி)

V. விடை தருக.

1. கடவுளின் உன்னத படைப்பு யார்?
   .....

www.lkedu.lk

2. இறைமகிமைக்காக நீர் இணைந்து செயற்படக்கூடிய சபைகள் 2 தருக?

.....

.....

3. படைப்பு மட்டில் உமது கடமை என்ன?

.....

.....

4. இயேசு கற்பித்த செபத்தின் பண்புகள் எவை?

.....

.....

5. இயேசு செபித்த சந்தர்ப்பங்கள் 3 தருக?

.....

.....

.....

6. நீர் செபிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் 3 தருக?

.....

.....

.....

7. இயேசு எத்தனைத் திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்தார்?

.....

8. இயேசு இலாசரை உயிர்ப்பித்த இடம் எது?

.....

9. பாவ அறிக்கை செய்யும் அருளடையாளம் எது?

.....

.....

10. இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எத்தனை பேருக்குப் பகிர்ந்தளித்தார்?

.....

(50புள்ளி)

www.lkedu.lk